Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
**C.C.No.57/2023**

**Deposition of witness for: PW - 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | ருக்குமணி | **Father/Husband Name** | : | அய்யாவு |
| **Age** | | | **Calling** | : | |
| **Date** | **:** | **23.09.2025** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of September 2025.
(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது)
**எதிரி ஆஜர்.**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது மேலவளவு அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் குடியிருந்து வருகிறேன். சாட்சி அய்யாவு எனது கணவர். ஆஜர் எதிரியை தெரியும். சம்பவ சமயத்தில் எனது கணவரும், நானும் வயதான நிலையில் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறோம். விவசாயம் செய்து பிழைத்து வந்தோம், எனக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். பழனிச்சாமியான ஆஜர் எதிரி எனது கணவரின் தம்பி. 04.05.2022 ம் தேதி ஆஜர் எதிரி பழனிச்சாமி என்னுடனும், எனது கணவருடனும் சண்டை, சச்சரவுகள் செய்து வந்தார். 04.05.2022 ம் தேதி மாலை 05.00, 06.00 மணி இருக்கும் நான் எனது வீட்டில் சமைத்துக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி என்னிடம் வந்து அசிங்கமாக பேசினார். கம்பை வைத்து இடுப்பிலும், கைகளிலும், கால்களிலும் அடித்தார். அதில் எனக்கு வலி தாங்கமுடியாமல் சத்தம் போட்டேன் என்றும், அப்போது அருகில் இருந்த பாண்டிஸ்வரி என்பவர் ஒடி வந்து சண்டையை விலக்கி விட்டார், பழனிச்சாமி அப்போது என்னை மிரட்டிவிட்டு சென்றார், நான் அப்போது வீட்டிற்குள் ஒடி ஒழிந்துகொண்டேன். என்னை ஆட்டோவில் மேலூர் அரசு மருத்துவமனைக்கு எனது சொந்தக்காரர்கள் கொண்டு வந்து சேர்த்தார்கள், நான் மருத்துவமனையில் சுமார் 16 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். எதிரி என்னை தாக்கியதால் எனக்கு இடுப்பில் வலி ஏற்பட்டு இன்றைய நாள் வரை நீட்டி நடக்க இயலவில்லை.

தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள இடது கை பெருவிரல் ரேகை என்னுடையதுதான். **(அந்த புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது),** இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை )